தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 084 /ந/2023
நாள் 02.05.2023

திருமதி. H.A. ஃபாயிஜா,
காயல்பட்டணம்,
தூத்துக்குடி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
காயல்பட்டணம் நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், அழகாபுரி, கதவு எண். 85B/2 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. H.A. ஃபாயிஜா என்பவரின் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.03.2023 அன்று பெறப்பட்டு 084/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், அழகாபுரி, கதவு எண். 85B/2 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. H.A. ஃபாயிஜா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"I am Faiza and residing at door No. 85 B/2, Alagapuri, Kayalpattinam, (Assessment No. 139/014/00997). On 10/07/2012 which is exactly 11 years back, I applied for a Municipality Water Connection to the above residence and paid Rs.5100/- which included water supply new connection deposit Receipt attached for your reference. Until now. I didn't have the connection and thus entirely rely on well and other sources for water. In spite of writing many mails to Kayalpattinam Municipality Commissioner and visiting the office few times, I couldn't get a proper response. As there is a public water supply point just in fornt of my house, I don't know the reason why there is a such a delay in action. Kindly direct the relevant persons in Kayalpattinam Municpality to action swiftly" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 11.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் காயல்பட்டணம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் தனது 18.04.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"காயல்பட்டணம் நகராட்சி பகுதி கதவு எண். 85பி/2 அழகாபுரி தெருவில் வசித்து வருகின்ற திருமதி.ஃபாயிஜா க/பெ. ஹபீப் ரஹ்மான் என்பவர் தெரிவித்திருந்த புகாரின்படி, சம்பந்தப்பட்ட நபரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டதில், தனியர் நகராட்சி அலுவலகத்திற்கு வந்து மேற்படி, கடந்த 10.07.2012 அன்று புதிய குடிநீர் இணைப்பிற்கு செலுத்திய வைப்பு தொகை கட்டணம் மற்றும் விண்ணப்ப கட்டணம் சேர்த்து ரூ.5,100/—போக, 17.04.2023 அன்று இணைப்புக்கான மீதமுள்ள இதர கட்டண தொகை ரூ.5,020/— செலுத்தியதை தொடர்ந்து, குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் காயல்பட்டணம் நகராட்சி ஆணையரும் 19.04.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.04.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திருமதி. H.A. ஃபாயிஜா, 19.04.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

(5) எதிர்மனுதாரரான காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் 19.04.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

"காயல்பட்டினம் நகராட்சிப் பகுதி கதவு எண் 85பி/2 அழகாபுரி தெருவில் வசித்து வரும் மனுதாரர் தெரிவித்துள்ள புகாரையொட்டி, மனுதாரர் கடந்த 10.7.2012 அன்று புதிய குடிநீர் இணைப்பிற்கான வைப்புத் தொகை ரூபாய் 5100/—ஐ தவிர்த்து, மேற்பார்வைக் கட்டணம் மற்றும் சாலை பராமரிப்புக் கட்டணமாக ரூபாய் 5020/— ஐ செலுத்தக் கோரியதைத் தொடர்ந்து, மனுதாரால் மேற்கண்ட கட்டணம் நகராட்சியில் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்கிட நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:—

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டணத்தைச் சேர்ந்த திருமதி. H.A. ஃபாயிஜா என்பவர் தனது முறையீட்டு மனுவில் காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட தனது குடியிருப்புக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க வேண்டி 2012 ஆம் ஆண்டில் உரிய கட்டணம் செலுத்தியும் இந்நாள் வரை குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை என புகாராக தெரிவித்து, குடிநீர் இணைப்பினை வழங்க ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட கதவு எண்.85B/2, அழகாபுரி தெருவில் வசித்து வரும் திருமதி. H.A. ஃபாயிஜா என்பவர் மேற்படி குடியிருப்புக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க வேண்டி காயல்பட்டணம் நகராட்சியில் உரிய மனுவினை 10.07.2012 அன்று சமர்ப்பித்து, குடிநீர் இணைப்புக் கட்டணமாக ரூ.5,100/– தொகையும் செலுத்தியுள்ளார். புதிய குடிநீர் இணைப்பினை வழங்கிட வேண்டி நகராட்சியில் பலமுறை முறையிட்டும் அதற்கான பலன் கிடைக்காததால், மனுதாரர் 11 வருடங்களுக்கு பிறகு இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

அனைத்து உயிரினங்களுக்கும் வாழ்வதற்கு அத்தியாவசிமானவைகளுள் குடிநீர் மிகவும் அவசியமானதாகும். மனுதாரர் தனது குடியிருப்புக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க வேண்டி உரியக் கட்டணத்துடன் 2012 ஆம் ஆண்டிலேயே விண்ணப்பித்தும், 11 வருடங்களாக குடிநீர் இணைப்பை வழங்காமல் மனுதாரரை மனிதாபிமானமற்ற முறையில் அலைகழித்துள்ளதை தெள்ளத் தெளிவாக அறிய முடிகிறது. இச்செயலானது காயல்பட்டணம் நகராட்சி அலுவலர்கள் / பணியாளர்களின் பொறுப்பற்ற தன்மையையும், தன்னிச்சையாக செயல்பட்டுள்ளதையும் காட்டுகிறது.

அடிப்படைத் தேவையான குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதில் மெத்தனமாகவும், பணியில் கடமை தவறியதன் மூலம் அரசுக்கும், நகராட்சிக்கும் அவப்பெயர் ஏற்படும் வண்ணம் காயல்பட்டணம் நகராட்சி அலுவலர்கள் நடந்து கொண்டுள்ளனர் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருவாய்த் துறை மற்றும் நகராட்சி நிர்வாக (மற்றும்) குடிநீர் வழங்கல் துறைகளில் பொது மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் / புகார் மனுக்கள் மீது எவ்வித காலதாமதமுமின்றி உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள். இதனை மீறும் விதமாக நகராட்சி அலுவலர்கள் / பணியாளர்கள் நடந்து கொண்டுள்ளனர் என்றே கருத வேண்டியுள்ளது.

இந்நிலையில் மனுதாரரின் குடியிருப்பிற்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க 11 வருடங்கள் நீண்ட காலதாமதத்திற்கு காரணமான சம்பந்தப்பட்ட காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய விதிகளின்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், பொது மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் / புகார்கள் குறித்து இனி வருங்காலத்தில் எவ்வித காலதாமதமின்றி உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என அனைத்து நகராட்சி / மாநகராட்சி ஆணையாளர்களுக்கும் சுற்றிக்கை மூலம் அறிவுரைகள் வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

The sheer indifference and slackness of the Kayalpattinam Municipality in providing water supply connection to the petitioner for 11 years are severely censured by this Forum. It exposes a sad state of affairs where there is no system of review of pending issues vis – a - vis the local public. The DMA is instructed to frame charges against the delinquent officials involved in this inordinate and decadal delay in the provision of a basic amenity where in the petitioner had submitted the connection charges and stipulated fees way back in 2012 itself. Such delinquency on the part of the Local body officials of Kayalpattinam Municipality causes a needless slur on the image of Local Administration groomed and nourished by the able leadership and guidance of the Tamil Nadu Government. The Commissioner, Kayalpattinam Municipality is directed to provide water supply connection to the petitioner house within 10 days and send a compliance report to this Forum by 15.05.2023.

2023 ஆம் ஆண்டு மே திங்கள் 02–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி. H.A. ஃபாயிஜா,
85B/2, அழகாபுரி, காயல்பட்டணம்,
தூத்துக்குடி மாவட்டம்.

2) ஆணையாளர், காயல்பட்டணம் நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப்பதிவாளர்